අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# வணிகக் கல்வியும் கணக்கீடும்

## வினாத்தாள் I & II




The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 60 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| வணிகக்கல்வியும் கணக்கீடும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

### வணிகக்கல்வியும், கணக்கீடும் - I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

**பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம 5 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

யாழ்ப்பாண நகரப்புறப் பகுதிகளில் காணப்படும் உணவகங்கள் மற்றும் சில்லறை வியாபார நிறுவனங்களை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகஸ்த்தர்கள் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை ஒன்றினை மேற்கொண்டனர். இதன்மூலம் உடல்நலத்திற்கு தீங்கான முறையில் காணப்பட்ட உணவுப்பொருட்கள் அழிக்கப்பட்டு குறித்த வணிகங்களுக்கு தடையுத்தரவு வழங்கியதுடன் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்த சில்லறை வியாபர நிலையங்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1. மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் ' உடல் நலத்திற்கு தீங்கான உணவுப்பொருட்கள் அழிக்கப்பட்டது' என்பதன் மூலம் இனங்காணக்கூடிய **மனித தேவைகள்** யாவை?
   (1) சுகாதாரம், உடல் நலம் (2) உணவு, சுகாதாரம்
   (3) உணவு, சிற்றுண்டிகள் (4) சிற்றுண்டிகள், உடல்நலம்

2. மேலே உள்ள சம்பவத்தின் மூலம் இனங்காணப்படும் பிரதானமான **புறச்சூழல்** காரணியாக அமைவது
   (1) பொருளாதாரச் சூழல் (2) பூகோளமயச் சூழல்
   (3) தொழில்நுட்பச் சூழல் (4) சட்டச் சூழல்

3. **நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை** எவ்வகையான வணிக அமைப்பைச் சார்ந்தது?
   (1) அரச திணைக்களங்கள் (2) அரச கம்பனிகள்
   (3) அரச கூட்டுத்தாபனங்கள் (4) கூட்டுறவுச் சங்கங்கள்

4. உணவகங்களை **உற்பத்தியின் தன்மையின்** அடிப்படையில் வகைப்படுத்தும்போது பின்வருவனவற்றுள் எவ்வகை வணிகமாகக் கருதப்படும்?
   (1) சேவை உற்பத்தி வணிகம் (2) பொருள் உற்பத்தி வணிகம்
   (3) இலாப நோக்குள்ள வணிகம் (4) தனியார்துறை வணிகம்

5. **சில்லறை வியாபார நிறுவனங்களின்** பண்பொன்றாக அமைவது
   (1) மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை விற்பனை செய்தல்
   (2) பொதுவாக அலகுக்கான விற்பனை விலை குறைவாக இருத்தல்
   (3) தெரிவு செய்யப்பட்ட சில வகைப் பொருட்கள் மட்டுமே விற்பனைக்கு வைத்திருத்தல்
   (4) நுகர்வோருக்கு அண்மித்ததாகக் காணப்படல்

**பின்வரும் சம்பவக் கற்கையினைப் பயன்படுத்தி 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**
சாரங்கன் தனது பிரதேசத்தில் அதிகமாகப் பயிரிடப்படும் மூங்கில்களை அதன் உற்பத்தியாளரிமிருந்து கொள்வனவு செய்து அழகிய வேலைப்பாடுடைய தளபாடங்களை தயாரித்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகின்றார்.

6. மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி அக்கறை செலுத்தும் தரப்பினராகக் கருதப்பட முடியாதவர்
(1) உரிமையாளர் - சாரங்கன் (2) ஊழியர் - உதவியாளர்
(3) வழங்குநர் - மூங்கில் உற்பத்தியாளர் (4) வாடிக்கையாளர்- தளபாடங்களை கொள்வனவு செய்வோர்

7. தளபாடங்களை உற்பத்தி செய்யப் பயன்படும் மூங்கில்கள் எவ்வகை உற்பத்திக் காரணியாகக் கருதப்படும்,
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

8. 'தற்போதுள்ள நிதிக்கொள்கைக்கமைய அடுத்த ஆண்டு இறுதியாகும்போது பணவீக்கத்தை சாதாரண நிலைக்குக் கொண்டுவர முடியுமென மத்தியவங்கி ஆளுநர் கருத்துத் தெரிவித்திருந்தார்' மேற்கூறிய செய்தியின் மூலம் இனங்காணக்கூடிய வணிகச் சூழல்க் காரணிகளாவன
(1) பூகோளமயச் சூழல், பொருளாதாரச் சூழல் (2) அரசியல் சூழல், தொழில்நுட்பச் சூழல்
(3) அரசியல் சூழல், பொருளாதாரச் சூழல் (4) பொருளாதாரச் சூழல், சட்டச் சூழல்

9. படட்யக் கணக்காளர் சிலர் ஒன்றிணைந்து ஆரம்பிக்க பொருத்தமான வணிக அமைப்பு
(1) தனியுடைமை வணிகம் (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
(3) கூட்டுறவுச் சங்கம் (4) பங்குடைமை வணிகம்

10. நிலையான வைப்புக் கணக்குத் தொடர்பாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) வங்கிக் கரும நேரங்களில் எச்சந்தர்ப்பத்திலும் பணத்தை வைப்பிலிட முடியும்
(2) வரவு அட்டை மூலம் கொடுப்பனவு செய்ய முடிதல்
(3) யாதேனும் குறிப்பிட்ட காலவரையொன்றிற்காக வைப்புக்களைப் பேணல்
(4) தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் மூலம்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிதல்

11. இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைப் பேணும் நிஹால் என்பவர் தனது வாடிக்கையாளரான நியாஸ் என்பவருக்கு ரூ 50 000 பெறுமதியான காசோலையொன்றை வழங்கியிருந்தார். நியாஸ் அதனை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்து பணமாக மாற்றிக்கொண்டார்.
மேலே தரப்பட்ட சம்பவத்தில் வழங்கப்பட்ட காசோலையானது
(1) பொதுமுறைக் குறுக்குக் கோடிட்டதாகும்.
(2) சிறப்புமுறைக் குறுக்குக் கோடிட்டதாகும்.
(3) குறுக்குக் கோடிடப்படாததாகும்.
(4) வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்ய முடியாததாகும்.

12. சாருகேக்ஷ் தனது தொழிற்சாலையை தீ அபாயக் காப்புறுதியின் கீழ்க் காப்புறுதி செய்துள்ளார். அத்தொழிற்சாலையில் மின்னொழுக்கு காணப்பட்ட போதிலும் காப்புறுதிப்பத்திரத்தில் அதுபற்றிக் குறிப்பிடவில்லை. தொழிற்சாலையினுள் தீ விபத்து ஏற்பட்டபோது காப்புறுதி நிறுவனம் நட்டஈடு செலுத்த மறுத்தது. இதற்கு காரணமாக அமைந்த காப்புறுதித் தத்துவம் யாது?
(1) காப்புறுதி செய்யும் உரிமை (2) உச்ச நம்பிக்கைத் தத்துவம்
(3) இழப்பீட்டுத் தத்துவம் (4) அண்மிய காரணித் தத்துவம்

13. போக்குவரத்து ஒன்றின் அடிப்படை அம்சங்களாவன பாதை, ஊடகம், வலு மற்றும்
(1) தரிப்பிடமாகும். (2) கிரயமாகும்.
(2) வேகமாகும். (4) கொள்ளளவாகும்.

14. பாதணிகளை உற்பத்தி செய்யும் வணிகமொன்று தனது விற்பனை வருமானத்தை 2023 ஆம் ஆண்டில் 10 % த்தால் அதி- கரிக்கத் தீர்மானித்து, அதற்குத் தேவையான வளங்களை பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. மேற்கூறிய சம்பவத்திலிருந்து கூடிய முகாமைத்துவக் கருமங்களாவன
(1) திட்மிடல், ஒழுங்கமைத்தல் (2) கட்டுப்படுத்தல், திட்டமிடல்
(2) நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் (4) திட்டமிடல், நெறிப்படுத்தல்

15. மனித தேவைகள், விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகச் சந்தைக்கு முன்வைக்கப்படும் எந்தவொன்றையும் குறிப்பிடுவது.
(1) உற்பத்திப் பொருள் (2) மேம்படுத்தல்
(3) சேவைகள் (4) இடம்

16. நிலையான வைப்புக் கணக்கு தொடர்பாக பிழையான கூற்றாக அமைவது.
(1) வைப்புச் சான்றிதழை பிணையாக வைத்து கடன் பெற முடியும்
(2) பாதுகாப்பான முதலீட்டு வழிமுறையொன்றாகக் காணப்படல்
(3) சேமிப்புக் கணக்குடன் ஒப்பிடும் போது கூடிய வட்டியைப் பெற முடியும்
(4) நினைத்த நேரத்தில் பணத்தை வைப்பிலிடவும் மீளப்பெறவும் முடியும்.

17. கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைவது
(1) நிதிசார் தகவல்களை பொழிப்பாக்கி வழங்கல்
(2) அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானம் மேற்கொள்ள பயனுள்ள தகவல்களை வழங்கல்

(3) கொடுக்கல் வாங்கல்களை கணக்கேடுகளில் பதிவு செய்தலும், பொழிப்பாக்கலும்
(4) இலாப நட்டங்களை கணிப்பிடலும் அறிக்கைப்படுத்தலும்

18. நடவடிக்கை ஒன்றிற்கான கணக்கியல் சமன்பாடு கீழ்வருமாறு
சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்
-15000 = -3000 -12000
கீழ்வரும் நடவடிக்கைளில் எது மேற்படி கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கு பொருத்தமானது.
(1) கடன்கொடுத்தோருக்கு கொடுத்தகாசு ரூ 15 000, பெற்ற கழிவு ரூ 3000 ஆகும்.
(2) வட்டி ரூ 3000 உட்பட வங்கித் தவணைக்'கட்டணமாக ரூ 15 000 செலுத்தப்பட்டது.
(3) ரூ 12000 கிரயமான பொருட்கள் ரூ 15000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
(4) ரூ 15000 கிரயமான கொருட்கள் ரூ 12 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

19. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் சொத்துப் பக்கம் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
(1) வங்கிக்கடன் பெற்றது ரூ 4 000
(2) கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூ 17 000
(3) மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ 5000
(4) காசிற்கு தளபாடம் வாங்கியது ரூ 10 000

20. வரவு அதிகரித்தல், செலவு குறைதல் என்னும் இரட்டை விளைவைக் கொண்ட கணக்குகளாகக் கருதப்படக் கூடியவை
(1) மூலதனக் கணக்கு, தளபாடக் கணக்கு
(2) விளம்பரக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு
(3) தொலைபேசிக் கட்டணக் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு
(4) கடன்கொடுத்தோர் கணக்கு, வருமானக் கணக்கு

21. கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூ 10 000 இற்கான சரியான இரட்டைப்பதிவாக அமைவது
(1) காசுக்கணக்கு வரவு ரூ 10 000
கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 10 000
(2) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ 10 000
காசுக் கணக்கு செலவு ரூ 10 000
(3) காசு அதிகரித்தல் ரூ 10 000
கடன்பட்டோர் குறைதல் ரூ 10 000
(4) கடன்பட்டோர் அதிகரித்தல் ரூ 10 000
காசு குறைதல் ரூ 10 000

22. கீழே X நிரலில் மூல ஏடுகளும், Y நிரலில் மூல ஆவணங்களும் தரப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| 1. வங்கிக்கணக்கு | A. பற்றுச்சீட்டு |
| 2. கொள்வனவு நாட்குறிப்பு | B. நாட்குறிப்புக் கைச்சாத்து |
| 3. பொது நாட்குறிப்பு | C. வைப்புச்சீட்டு |
| 4. காசேடு | D. பட்டியல் |

மூல ஏடுகளுக்குப் பொருத்தமான மூல ஆவணங்களை இணைக்கும்போது சரியாக அமையும் விடைத்தொகுதி
(1) A, D, B ,C (2) C, D, B, A (3) C, D, A, B (4) A, D, C, B

23. வங்கி கணக்கிணக்க கூற்று என்பதால் கருதப்படுவது யாது?
(1) வங்கிக் கூற்றின் மீதியை வணிகத்தின் வங்கி மீதியுடன் கணக்கிணக்கம் செய்தல்
(2) வங்கிக் கூற்று பற்றிய ஆய்வு
(3) கடந்த கால வங்கிக் கூற்றினை நடப்பு மாத வங்கிக் கூற்றுடன் ஒப்பிடுதல்
(4) வங்கிக் கணக்கினை பொருத்தமான விபரங்களுடன் திருத்துதல்.

24. பாரதி வணிகம் ஜனவரி 2022 முதல் சில்லறைக்காசு வசக்கட்டு நிதியை ரூ 2000 இலிருந்து ரூ 3000 ஆக அதிகரித்தது. பெப்ரவரி ஆரம்பத்தில் மீள் நிரப்பல் தொகை ரூ 2500 ஆகும். ஜனவரி மாதத்தற்கான சில்லறைச் செலவு யாது?
(1) ரூ 1500 (2) ரூ 2500 (3) ரூ 3000 (4) ரூ 1000

25. சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள் எனும் அடிப்படை கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருவனவற்றுள் எதனூடாக வெளிப்படுத்தப்படும்?
(1) காசேடு
(2) இலாப நட்டக் கூற்று
(3) பரீட்சை மீதி
(4) நடுநிலைமைக் கூற்று

26. பரீட்சை மீதி தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு
A. பேரேட்டுக் கணக்கு மீதிகளின் பட்டியலாகும்.
B. மூல ஏடுகளாகத் தொழிற்படல்
C. பேரேடுகளாகத் தொழிற்படல்
D. வரவு, செலவு மீதிகளின் தொகுப்பாகும்.

**மேற்கூறியவற்றுள் சரியான கூற்றுக்களாக அமைவது**

(1) A, D மட்டும் (2) A, B, C, D அனைத்தும்
(3) B, C மட்டும் (4) B, C, D மட்டும்

27. 'நாட்குறிப்புக் கைச்சாத்து' மூல ஆவணமாக பயன்படுத்தப்படும் மூல ஏட்டினைக் குறிப்பது.
(1) காசேடு (2) வங்கிக் கணக்கு
(3) பொது நாட்குறிப்பேடு (4) விற்பனை நாட்குறிப்பு

28. நேர்கோட்டு முறையில் நிலையான சொத்தொன்றின் வருடாந்த பெறுமானத் தேய்வு அளவைக் கணிப்பதற்காக கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளாவன. கிரயம், எஞ்சிய பெறுமதி மற்றும்
(1) கொள்வனவு செய்த திகதி ஆகும்.
(2) பயன்படு ஆயுட் காலம் ஆகும்.
(3) தேய்வு சதவீதம் ஆகும்.
(4) சந்தைப் பெறுமதியாகும்.

29. பின்வரும் இரண்டு சமன்பாடுகளின் மூலம் கணக்கிடக் கூடியவற்றை முறையாகக் காட்டுவது,
ஆரம்ப இருப்பு + கொள்வனவு + கொள்வனவுச் செலவு - இறுதியிருப்பு = ……………………..
விற்பனை – விற்றசரக்கின் கொள்விலை = ………………………..
(1) மொத்தஇலாபம், விற்ற சரக்கின் கொள்விலை (2) விற்றசரக்கின் கொள்விலை, மொத்தஇலாபம்
(3) விற்றசரக்கின் கொள்விலை, தேறிய இலாபம் (4) தேறியஇலாபம், விற்றசரக்கின் கொள்விலை

30. வணிகமொன்றின் நிதி நிலைமையைக் காட்டுவதற்காக குறித்ததொரு தினத்தில் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை,
(1) பரீட்சைமீதி (2) இலாப நட்டக் கூற்று (3) காசேடு (4) நிதி நிலைமைக் கூற்று

31. நாமகள் விளையாட்டுக் கழகத்தில் ஆண்டுச் சந்தா ரூ 200 செலுத்தும் 300 அங்கத்தவர்கள் உள்ளனர். 31.12.2021 இல் 50 அங்கத்தவர்கள் 2021 ஆண்டுக்கான சந்தாவை செலுத்தவில்லை எனின் ஆண்டுக்கான சந்தா வருமானமும், காசாகப் பெற்ற சந்தாவும் முறையே
(1) ரூ 60 000, ரூ 50 000 (2) ரூ 50 000, ரூ 60 000
(3) ரூ 10 000, ரூ 50 000 (4) ரூ 60 000, ரூ 10 000

32. இலாப நோக்கற்ற அமைப்புக்களால் தயாரிக்கப்படும் கணக்குகளின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.
A. காசு அடிப்படையில் தயார் செய்யப்படுதல்
B. இலாபநட்டக் கூற்றை ஒத்திருத்தல்
C. அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படுதல்
D. கணக்காண்டின் இறுதியில் இறுதிக் காசு மீதியைக் காட்டும்
E. ஆண்டுக்குரிய வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மட்டும் பதிவு செய்யப்படுதல்
மேற்கூறியவற்றுள் வருமானக்கூற்று/வருமானச் செலவுக் கணக்கின் பண்புகளை மட்டும் காட்டும் விடைத்தொகுதியாக அமைவது,
(1) A, D (2) B, C, D (3) B, C, E (4) A, B, C

33. உற்பத்திக் கிரயத்திற்கான பிரதான கூறுகளாக அமைவது
(1) முதற்கிரயம், நேர்க்கிரயம் (2) நேரில் பொருட்கிரயம், நேரில் கூலிக்கிரயம்
(3) மேந்தலைக்கிரயம், நேரில் செலவுக்கிரயம் (4) நேர்க்கிரயம், நேரில் கிரயம்

34. 31.12.2021 இல் தளபாட உற்பத்தி நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவுகள் தொடர்பான தகவலகள் வருமாறு

| | |
|---|---|
| பலகைக் கொள்வனவு | ரூ 60 000 |
| பலகை கொள்வனவு கூலி | ரூ 10 000 |
| தச்சனுக்கான கூலி | ரூ 40 000 |
| தொழிற்சாலைச் செலவுகள் | ரூ 25 000 |

2021 இல் 10 மேசைகள் உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கமைய மேசை ஒன்றிற்கான கிரயமாக அமைவது
(1) ரூ 9 000 (2) ரூ 13 500 (3) ரூ 8 500 (4) ரூ 10 000

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**
சுகிர்தன் வணிகத்தின் 31.12.2021 இல் உள்ளபடியான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| மூலதனம் | | 120 000 |
| கொள்வனவுகள் | 80 000 | |
| விற்பனைகள் | | 180 000 |
| 01.01.2021 இல் இருப்பு | 20 000 | |
| பற்று | 10 000 | |
| உடசுமை கூலி | 5 000 | |
| கொடுத்த கழிவு | 4 000 | |
| வாடகை | 3 000 | |
| விளம்பரம் | 2 000 | |
| கட்டடம் கிரயத்தில் | 120 000 | |
| கட்டடம் திரண்டதேய்வு (01.01.2021 இல்) | | 50 000 |
| 10% வங்கிக் கடன் | | 70 000 |
| காசு | 40 000 | |
| கடன்பட்டோர் | 35 000 | |
| கடன்கொடுத்தோர் | | 25 000 |

*மேலதிக தகவல்கள்:-*

*இறுதியிருப்பு 31.12.2021 ரூ 25 000*
*வியாபாரக் கடன்பட்டோரில் ரூ 5 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.*
*கட்டடங்களுக்கு 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.*

*35. 31.12.2021 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விற்பனைக் கிரயத்தின் பெறுமதி*
*(1) ரூ 75 000 (2) ரூ 90 000 (3) ரூ 85 000 (4) ரூ 80 000*

*36. 31.12.2021 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மொத்த இலாபம்*
*(1) ரூ 100 000 (2) ரூ 95 000 (3) ரூ 105 000 (4) ரூ 110 000*

*37. 31.12.2021 இல் விநியோகச் செலவின் மொத்தப் பெறுமதி*
*(1) ரூ 6 000 (2) ரூ 9 000 (3) ரூ 7 000 (4) ரூ 11 000*

*38. 31.12.2021 இல் வணிகத்தின் தேறிய இலாபம்*
*(1) ரூ 77 000 (2) ரூ 60 000 (3) ரூ 72 000 (4) ரூ 67 000*

*39. வணிகத்தின் 31.12.2021 இல் உள்ளபடியான உரிமையாண்மையின் பெறுமதி*
*(1) ரூ 72 000 (2) ரூ 192 000 (3) ரூ 115 000 (4) ரூ 187 000*

*40. மேற்படி வணிகத்தின் அட்'டுறு வங்கிக்கடன் வட்டிக்கான இரட்டைப்பதிவாக அமைவது*
*(1) அட்டுறு வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு ரூ 5 000*
*வங்கிக்கடன் வட்டிக் கணக்கு செலவு ரூ 5 000*
*(2) வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு ரூ 5 000*
*வங்கிக்கடன் கணக்கு செலவு ரூ 5 000*
*(3) வங்கிக்கடன் கணக்கு வரவு ரூ 5 000*
*வங்கிக் கடன் வட்டிக் கணக்கு செலவு ரூ 5 000*
*(4) வங்கிக்கடன் வட்டிக்கணக்கு வரவு ரூ 5 000*
*அட்டுறு வங்கிக்கடன் வட்டிக் கணக்கு ரூ 5 000*

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு
தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

# கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு
தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

### வணிகக்கல்வியும் கணக்கீடும் - II

*அறிவுறுத்தல்கள்.*

- *முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*
- *அறிவுறுத்தலுக்கமைய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*

***கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு 1 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.***

ஆரையம்பதி கிராம மக்கள் சமூகத்தில் போதைவஸ்துப் பாவனை, மது பாவனை போன்ற சமூகப்பிரச்சினைகள் காணப்பட்டன. இவற்றினை குறைப்பதற்கு எண்ணங்கொண்ட சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து உளவளத்துறையில் பட்டம் பெற்ற ஆனந்தி என்பவரையும் இணைத்து 'சுகவாழ்வு மேம்பாட்டுக் கழகம்' என்னும் பெயரில் இலாபநோக்கற்ற வணிகமொன்றை ஆரம்பித்திருந்தனர். இக்கழகத்தில் அங்கத்தவர் சந்தாவாக ரூ 500 காணப்பட்டதுடன் 20 அங்கத்தவர்கள் சுயவிருப்பின் பெயரில் இணைந்து கொண்டிருந்தனர்.

*கழகத்தில் 2022 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு*

| | |
|---|---|
| *01.01.2022 இல் நன்கொடையாகப் பெற்ற மோட்டார் வாகனம் ரூ 50 000* | |
| *05.01.2022 நன்கொடைகள் பெற்றது* | *ரூ 5 000* |
| *10.01.2022 சேகரித்த சந்தா* | *ரூ 8 000* |
| *12.01.2022 சமுர்த்தி வங்கி ஒதுக்கீட்டில் பெற்றவை* | *ரூ 15 000* |
| *15.01.2022 போதை ஒழிப்பு செயற்பாட்டு வளவாளர் கொடுப்பனவு* | *ரூ 4 000* |
| *18.01.2022 போதை ஒழிப்பு செயற்பாட்டின் உபசரிபபு கொடுப்பனவுகள்* | *ரூ 2 000* |
| *26.01.2022 காவலாளி சம்பளம்* | *ரூ 3 000* |
| *29.01.2022 வாடகை* | *ரூ 2 000* |

**மேலதிக தகவல்கள்**

1. *நன்கொடையாகப் பெற்ற மோட்டார் வாகனத்தின் ஆயட்காலம் 10 வருடங்களாகும்.*
2. *மாதம் ரூ 3000 செலுத்துவது என்ற அடிப்படையில் கட்டடத்தினை வாடகைக்கு பெற்றுள்ளது.*

I. *(அ) சுகவாழ்வு மேம்பாட்டு கழகத்தினால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?*
*(ஆ) மேற்படி கழகத்தின் பலம் ஒன்றினைக் குறிப்பிடுக.*

II. *(அ) சமூக மேம்பாட்டுக் கழகம் உரிமை அடிப்படையில் எத்தகைய வணிகமாகும்?*
*(ஆ) மேற்படி வணிகத்தின் உள உழைப்பிற்கு உதாரணம் ஒன்று தருக.*

III. *(அ) மேற்படி வணிகத்தின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த பிரதான காரணி யாது?*
*(ஆ) இவ் வணிகத்தில் பயன்படுத்தப்படும் போக்குவரத்து முறை ஒன்றினைக் குறிப்பிடுக.*

IV. *(அ) மேற்படி சம்பவத்தில் இனங்காணக் கூடிய முகாமைத்துவக் கருமம் ஒன்றினைக் குறிப்பிடுக.*
*(ஆ) மேற்படி சம்பவத்தில் இனங்காணக் கூடிய அரச திணைக்களத்திற்குரிய அமைப்பொன்றைக் குறிப்பிடுக.*

V. *01.01.2022 இல் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கலிற்கான அடிப்படைக் கணகீட்டுச் சமன்பாட்டினை தொகைளுடன் தருக.*

VI. *(அ) நடைமுறையல்லாச் சொத்திற்கு ஓர் உதாரணம் தருக.*
*(ஆ) இந்நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் கணக்கு ஒன்றின் பெயரினைக் குறிப்பிடுக.*

VII. *(அ) ஜனவரி மாதத்திற்கான மோட்டார் வாகனத்தின் பெறுமானத் தேய்வினைக் கணிப்பிடுக.*
*(ஆ) ஜனவரி மாதத்தில் சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் எத்தனை பேர்?*

VIII. *(அ) ஜனவரி மாதத்தில் செலுத்த வேண்டிய வாடகை எவ்வளவு?*
*(ஆ) இதற்கான இரட்டைப்பதிவினை தொகைகளுடன் தருக.*

IX. *31.12.2022 இல் கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மீதியைக் கணிப்பிடுக.*

X. *ஜனவரி மாதத்திற்குரிய வருமான மிகை அல்லது பற்றாக்குறையினைக் கணிப்பிடுக.*

**(2X10 = 20 *புள்ளிகள்*)**

**பகுதி II(அ)**

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

***02.*** I. ஜோதி என்பவர் கல்விப் பொது சாதாரண தரம் சித்தி பெறாத காரணதத்தினால் சுயதொழில் ஒன்றினை மேற்கொள்ளும் நோக்குடன் பாடசாலை ஒன்றில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடாத்தி வருகின்றார்.

(அ) மேற்கூறிய சம்பவத்தின் மூலம் இனங்காணக்கூடிய தேவை, விருப்பங்களைக் குறிப்பிடுக.

(ஆ) பொதுவாக இவ்வணிகத்தில் இனங்காணக்கூடிய நோக்கங்கள் இரண்டு குறிப்பிடுக.

*(02 புள்ளிகள்)*

II. **பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக**

(அ) மொத்த வியாபார வணிகம் ஒரு பொருள் உற்பத்தி வணிகமாகும். (.........)

(ஆ) 'செங்கல்' நிலம் என்னும் உற்பத்திக் காரணிக்குள் உள்ளடங்கும். (.........)

(இ) ஆடை என்பது மனித தேவைகளில் ஒ்ன்றாகும். (.........)

(ஈ) ஊழியர்கள் நிறுவனத்தின் அகச்சூழல் காரணிக்குள் உள்ளடங்கும். (.........)

*(02 புள்ளிகள்)*

III. சாந்தி என்பவர் குறைந்த மூலதனம் வைத்திருந்தமையால் செங்கல் உற்பத்தி முயற்சி ஒன்றினை களிமண்வளம் உள்ள நிலத்தினை குத்தகைக்கு பெற்று செங்கல் உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றார்.

(அ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் மேற்படி வணிகத்தை வகைப்படுத்துக.

(ஆ) இத்தகைய வணிகத்தின் பண்புகள் இரண்டினைத் தருக.

*(02 புள்ளிகள்)*

IV. வாணி என்பவர் தனது வீட்டின் ஒரு பகுதியில் தையல் தொழில் ஒன்றினை மேற்கொண்டு தனது வீட்டுத்தேவையையும், அயலவர் தேவையையும் பூர்த்தி செய்து வருகின்றார்.

(அ) இவ்வணிகத்தில் இனங்காணக்கூடிய உற்பத்திக் காரணிகள் இரண்டிளைக் குறிப்பிடுக.

(ஆ) இவ்வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர் இரண்டினைக் குறிப்பிடுக.

*(02 புள்ளிகள்)*

(மொத்தம் 8 புள்ளிகள்)

***03.*** I. மோகன் என்பவர் வங்கியில் கடன் பெற்று கையடக்கத் தொலைபேசிகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார்.

(அ) இங்கு வங்கிக்கடன் என்பது எப்பொருளாதார சூழல் காரணியைக் குறித்து நிற்கின்றது.

(ஆ) இவ்வணிகத்தில் தாக்கம் செலுத்தும் புறச் சூழல் காரணிகள் இரண்டு தருக.

II. **பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.**

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட ஆளுமையுள்ள வணிக அமைப்பாகும். (..........)

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உரிமையும் நிர்வாகமும் அரசிற்குரியதாகும். (..........)

(இ) இறுதி நுகர்விற்கு பொருட்களை விநியோகிக்கும் வணிகம் மொத்த வியாபாரமாகும். (..........)

(ஈ) வணிகவங்கிகளிலேயே நடைமுறைக் கணக்கினைப் பேண முடியும். (..........)

III. மாறன் என்பவர் இந்தியாவிலிருந்து வெங்காயங்களை இறக்குமதி செய்து நாட்டிலுள்ள மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றார்.

(அ) இவரின் வியாபாரச் செயற்பாட்டினால் உள்நாட்டு உற்பத்தியாளருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக.

(ஆ) தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் இவரின் வணிகச் செயற்பாட்டினால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கம் ஒன்றினைக் குறிப்பிடுக.

IV. சங்கரன் என்பவரின் வசிப்பிடம் பிரதான வீதியில் அமைந்தமையினால் வீட்டின் ஒரு பகுதியில் பலசரக்கு வியாபாரம் ஒன்றினை நடாத்தி வருகின்றார்.

(அ) சங்கரன் வணிகத்தில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக.

(ஆ) பங்குடைமை வணிகத்துடன் ஒப்பிடும்போது இவ்வணிகத்தில் காணப்படும் நன்மைகள் இரண்டு தருக.

*04.* I. அண்ணாமலை என்பவர் தமது கிராமத்திலுள்ள பண்ணைகளிலிருந்து பாலினை சேகரித்து நகரிலுள்ள உணவகங்களிற்கு விநியோகித்து வருகின்றார்.

(அ) அண்ணாமலையால் பயன்படுத்தப்படும் துணைச்சேவையினைக் குறிப்பிடுக.

(ஆ) அண்ணாமலை ஆயுள் காப்புறுதிப்பத்திரமொன்றை பெற விரும்புகின்றார். ஆயுள் காப்புறுதியின் நன்மைகள் தொடர்பாக அண்ணாமலைக்கு எவ்வாறான ஆலோசனைகளை வழங்குவீர் என்பதைக் குறிப்பிடுக.

*(02 புள்ளிகள்)*

II. **பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.**

(அ) பாதணி உற்பத்தி நிறுவனமொன்றின் இலக்கு சந்தையாக ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களின் பாதணி உற்பத்தியைக் குறிப்பிட முடியும். (..........)

(ஆ) உற்பத்தி பொருட்களை கழிவு விலையில் வழங்குதல் சந்தைப்படுத்தல் கலவையில் மேம்படுத்தலாகும். (.........)

(இ) பங்குகளில் முதலீடு செய்வதைவிட நிலையான வைப்பில் முதலிடுவதனால் அதிக இலாபம் உழைக்க முடியும். (.........)

(ஈ) ஆவணங்களை கொள்வனவு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். (..........)

*(02 புள்ளிகள்)*

III. திணேஸ் என்பவர் அரிசி ஆலை உரிமையாளராவார். இவர் புகையிரதத்தைப் பயன்படுத்தி கொழும்புக்கு அரிசியினை அனுப்பி விற்பனை செய்து வருகின்றார்.

அ) திணேஸ் புகையிரதத்தைப் பயன்படுத்தி அரிசியினை அனுப்புவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

(ஆ) திணேஸ் அரிசி விநியோகச் செயற்பாட்டில் பயன்படுத்தக் கூடிய தொடர்பாடல் முறைகளுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

IV. சில்லறை வியாபாரியான மதி என்பவர் தனது விற்பனையை அதிகரிப்பதற்காக தனது வியாபார நிலையத்தினை 12 மணித்தியாலம் திறப்பதற்கு தீர்மானித்தார். இதற்காக மேலதிகமாக இரு ஊழியரை வேலைக்கமர்த்தினார்.

(அ) மேற்படி சம்பவத்தில் இனங்காணக் கூடிய இரண்டு முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

(ஆ) மேலே உள்ள முகாமைக் கருமங்களிற்கான உதாரணம் ஒவ்வொன்று தருக.

(02 புள்ளிகள்)

( மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II
## கணக்கீடு
### (இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)

05. I. (அ) வணிகமொன்றிற்கும், வேறு பிரிவினருக்குமிடையே நடைபெறும் வளங்களின் பரிமாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்?

(ஆ) கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் எது? (02 புள்ளிகள்)

II. பின்வரும் இரட்டைப்பதிவிற்குரிய கொடுக்கல் வாங்கல்களை எழுதுக.

(அ) காசுக் கணக்கு வரவு ரூ 10 000
கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 10 000

(ஆ) பற்றுக் கணக்கு வரவு ரூ 15 000
கொள்வனவுக் கணக்கு செலவு ரூ 15 000 (02 புள்ளிகள்)

III (அ) வணிகமொன்றில் காணப்படும் பின்வரும் சொத்துக்களை கீழே தரப்படும் தலைப்பிற்கமைய வகைப்படுத்திக் காட்டுக.

| | |
|---|---|
| கடன்பட்டோர் | உபகரணங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | காசு மீதி |

1. நடைமுறைச் சொத்து 2. நடைமுறையல்லாச் சொத்து

(02 புள்ளிகள்)

(ஆ) ரமணன் வணிகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01.01.2021 இல் மூலதனம் | ரூ 420 000 |
| நிதியாண்டு வருமானங்கள் | ரூ 210 000 |
| நிதியாண்டு செலவினங்கள் | ரூ 120 000 |
| வருடத்தில் இடப்பட்ட மேலதிக மூலதனம் | ரூ 50 000 |

2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உரிமையாளரின் உரிமையினைக் கணப்பிடுக.

(02 புள்ளிகள்)

IV. அஸ்வின் வணிகத்தில் 2022 ஏப்ரல் முதல் வாரத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

| திகதி | சொத்துக்கள் | = உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 01 | அதிகரித்தல் | | - | அதிகரித்தல் |
| ஏப்ரல் 02 | குறைதல் | குறைதல் | - | |
| ஏப்ரல் 03 | அதிகரித்தல் | அதிகரித்தல் | - | |
| ஏப்ரல் 06 | அதிகரித்தல்<br>குறைதல் | | - | - |

மேற்காட்டிய அட்டவணைக்கேற்ப ஒவ்வொரு தினத்திலும் நிகழ்ந்த சாத்தியமான கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்று தருக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06. I. (அ) வங்கிக் கூற்று என்றால் என்ன?

(ஆ) நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படும் அடிப்படைக் கணக்கீட்டுக் கூறுகள் இரண்டினை எழுதுக.

(2 புள்ளிகள்)

கீழ்வரும் கணக்குகளிற்கு தரப்படும் அட்டவணையில் கேட்கப்படும் விபரங்களுக்கமைவாக இரட்டை விளைவினை எழுதிக் காட்டுக.

| இல | கணக்கின் பெயர் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 01. | வங்கிக்கடன் கணக்கு | | |
| 02. | தளபாடக் கணக்கு | | |
| 03. | விற்பனைக் கணக்கு | | |
| 04. | கடன்கொடுத்தோர் கணக்கு | | |

(02 புள்ளிகள்)

III. 2022 யூலை மாதத்தில் சாவித்திரி மொத்த வியாபாரத்தில் நிகழ்ந்த விற்பனைகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

05.07.2022 சாமந்தி என்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்குகள் ரூ 50 000 (பட்டியல் இல 245)

15.07.2022 காசுக்கு விற்ற சரக்குகள் ரூ 55 000 (பற்றுச்சீட்டு இல 425)

25.07.2022 5% வியாபாரக் கழிவில் வைதேகி என்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்குகள் ரூ 75 000 (பட்டியல் இல 250)

**வேண்டப்படுவது:**

(அ) விற்பனை நாட்குறிப்பு

(ஆ) விற்பனைக் கணக்கு

(இ) கடன் விற்பனைகளின் மொத்தத் தொகைக்கான இரட்டைப்பதிவினை எழுதிக் காட்டுக.

IV. காருண்யன் வணிகத்தின் 2022 ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கணக்கு வருமாறு: -

| திகதி | ப.இ | விபரம் | பே.ப | தொகை | திகதி | கை க | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.22 | | மீ.வ | | 18 000 | 05.01.22 | | மின்கட்டணம் | | 5 000 |
| 05.01.22 | | காசு | | 10 000 | 12.01.22 | | (601) | | 4 000 |
| 12.01.22 | | வைப்பு(100101) | | 15 000 | 22.01.22 | | பாரதி (602) | | 6 000 |
| 18.01.22 | | வைப்பு(200110) | | 25 000 | 29.01.22 | | பற்று (603) | | 10 000 |
| 28.01.22 | | வைப்பு(112400) | | 5 000 | 31.01.22 | | வாடகை (604) | | 48 000 |
| | | | | 73 000 | | | மீ.செ | | |

2022 ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கூற்று

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.01.2022 | மீ.வ | | | 18 000 |
| 05.01.2022 | வைப்பு | | 10 000 | 28 000 |
| 07.01.2022 | கா.இல (601) | 5 000 | | 23 000 |
| 11.01.2022 | வைப்பு | | 6 000 | 29 000 |
| 15.01.2022 | கா.இல (602) | 4 000 | | 25 000 |
| 18.01.2022 | வைப்பு (100101) | | 15 000 | 40 000 |
| 29.01.2022 | நிலையியல் கட்டளைக் காப்புறுதி | 3 000 | | 37 000 |

**வேண்டப்படுவது:**

வங்கிக்கணக்கும் வங்கிக் கூற்றும் 31.12.2022 இல் வேறுபடுவதற்கான காரணங்களை விளக்கமாகக் குறிப்பிடுக.

சீராக்கிய வங்கிக்கணக்கு (04 புள்ளிகள்)

07.

I. (அ) வருமானச் செலவுக் கணக்கு என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) மூலக்கிரயக் கணிப்பீட்டிற்கான சமன்பாட்டினைத் தருக.

பாரதி விளையாட்டுக் கழகத்தின் 31.12.2021 இல தயாரிக்கப்பட்ட கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01.01.2021இல் காசுமீதி | 15 000 | மின்கட்டணம் | 3 000 |
| சேகரித்த சந்தா | 18 000 | விளையாட்டு உபகரணம் கொள்வனவு | 25 000 |
| நன்கொடை | 3 000 | உபசரணைச் செலவு | 2 000 |
| கலைவிழா வருமானம் | | காவலாளி சம்பளம் | 5 000 |
| | 9 000 | 31.12.2021 மீதி | 10 000 |
| | 45 000 | | 45 000 |

**மேலதிக தகவல்கள்**

♦ இவ்விளையாட்டுக் கழகத்தில் ஆண்டுச் சந்தா ரூ 200 செலுத்தும் 100 அங்கத்தவர்கள் உள்ளனர்.

**வேண்டப்படுவது:**

31.12.2021 இல் முடிவுற்ற ஆண்டுக்கு பாரதி விளையாட்டுக் கழகத்தின் வருமானச் செலவுக் கணக்கு

III. வாணி தனியுடைமை வணிகத்தின் *31.03.2022* இல் முடிவடைந்த ஆண்டுக்கான பரீட்சை மீதி வருமாறு

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பொறி இயந்திரம் கிரயம் | *120 000* | |
| விநியோக வான் | *80 000* | |
| கொள்வனவுகள் | *75 000* | |
| விற்பனைகள் | | *145 000* |
| மூலதனம் | | *80 000* |
| *10%* முதலீடுகள் | *50 000* | |
| *5%* வங்கிக்கடன் | | *100 000* |
| *01.04.2021* இல் இருப்பு | *35 000* | |
| கொள்வனவுச் செலவுகள் | *5 000* | |
| இல் திரண்ட தேய்வு | | |
| பொறி இயந்திரம் | | |
| விநியோக வான் | | *40 000* |
| அறவிடமுடியாக்கடன் | | *30 000* |
| மின்கட்டணம் | *3 000* | |
| முதலீட்டு வருமானம் | *2 000* | |
| செலுத்திய வங்கிக்கடன் வட்டி | | *3 000* |
| சம்பளம் | *2 000* | |
| கடன்பட்டோர் | *4 000* | |
| கடன்கொடுத்தோர் | *35 000* | |
| காசுமீதி | | *15 000* |
| வங்கிமேலதிகப்பற்று | *30 000* | |
| | | *18 000* |
| | *431 000* | *431 000* |

**மேலதிக தகவல்கள்**

1. *31.03.2022* இல் வியாபார இருப்பின் கிரயம் ரூ *45 000*
2. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு தேய்விடுக.
   பொறி இயந்திரம் கொள்விலையில் 5%
   விநியோக வாகனம் கொள்விலையில் 10%
3. கடன்பட்டோரில் மேலும் ரூ *5000* இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்க வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(அ) *31.12.2022* இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) *31.12.2022* இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)